**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம் - 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) துணைப் பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ விதிக்கப்பட்டுள்ள 2003 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவக ஒழுங்குபடுத்தலின் 17 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108(1) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு அமைவாக எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்குஇணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அந்த ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிலையமானது கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அந்த ஆளுகைக்குட்பட்டதரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் துணைப் பிரிவின் பிரகாரம், நிலையத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வின் பொறுப்புக்கள்

முழுமையாக எடுத்துக் கொள்ளும் பட்சத்தில் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

என்னால் தொழில் தீர்ப்புக்கள் மற்றும் தொழில் ஐயப்பாட்டினையும் பேணும் வகையில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக் கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவே அன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க

ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானவாறும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக கவனம் செலுத்தும் போது நிலையத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறு அதன் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதும், அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- யாதேனுமொரு எழுத்து மூலமான சட்டம் அல்லது நிலையத்தின் பணிப்பாளர் சபையினால் வெளியிடப்பட்ட விசேட கட்டளை தொடர்பாக இணங்கியிருந்ததா என்பதும்,

- தமது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளின் உள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கு இணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

## 1.5 வருமதி மற்றும் சென்மதி கணக்குகள்

### 1.5.1 கிடைக்க வேண்டிய காசு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 01 முதல 08 ஆண்டுகள் வரையிலான காலப் பகுதியில் இருந்து வெளித் தரப்பினர்களிடம் இருந்து கிடைக்க வேண்டிய கூட்டுத் தொகை ரூ.3,359,805 பெறுமதியான கடன் மீதியினை அறவிட்டுக் கொள்வதற்கு மீளாய்வு ஆண்டின் இறுதி வரையில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எமது நிறுவனத்தினால் பல்வேறு அரச நிறுவனங்களுக்கு கணினி சேவைகளை வழங்கியமைக்காக கிடைக்க வேண்டிய காசு மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்காக தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகின்றது. | குறித்த கடன் தொகையினை துரிதமாக அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### நிதி பெறுபேறுகள்

மீளாய்வு ஆண்டின் தொழிற்பாட்டு பெறுபேறானது ரூ.69,954,870 தொகை மிகையொன்றாக காணப்பட்டதுடன், அதற்கேற்ப கடந்த ஆண்டின் மிகையானது ரூ.19,511,337 ஆக அமைந்திருந்தது. அதன் பிரகாரம் நிதி பெறுபேற்றிலே ரூ.50,443,533 பெறுமதியான விருத்தி ஒன்றினை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இந்த விருத்தியானது சம்பளம், வேதனம் மற்றும் ஓய்"திய பணிக்கொடைச் செலவினம் என்பன ரூ.101,340,805 பெறுமதியான விருத்தியுடன் ஒப்பீட்டளவில் அரச கொடைகள் மற்றும் உழைத்த வருமானம் என்பன ரூ.152,824,745 தொகையினால் அதிகரித்தமை பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வு ஆண்டின் இறுதி தினத்தன்று பிணை ஒப்பந்தத்தை மீறிய விரிவுரையாளர்கள் மூவரிடம் இருந்து அறவிட வேண்டியுள்ள 2 முதல் 15 வருடங்கள் வரையில் காலம் கடந்த மொத்தக் கூட்டுத் தொகையான ரூ.5,887,828 பெறுமதியான தொகையினை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிணை ஒப்பந்தத்தை மீறியதன் காரணமாக அறவிடப்பட வேண்டியுள்ள ரூ.5,887,828 பெறுமதியான தொகையினை அறவிட்டுக் கொள்ளல் தொடர்பில் உரியவாறு உள்ளகப் பொறுப்புக்கள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் என்பன ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | குறித்த அறவிட்டுக் கொள்ளல் தொடர்பான பணிகளை துரிதமாக முடிவுறுத்தல் வேண்டும். |

### 3.2 தொழிற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதவியணியின் அபிவிருத்தி மற்றும் பதவியணியின் மருத்துவக் கட்டணமாக மொத்தம் ரூ.20,632,794 பெறுமதியான 02 நிதியங்கள் திறைசேரியின் அனுமதி பெறப்படாது பேணிவரப்பட்டிருந்தது. | நிறுவனத்தினால் செயற்படுத்திய வெளிநாட்டு கருத்திட்ட நிதி ஏற்பாடுகளின் கீழ் பதவியணியின் விருத்திக்காக பதவியணி அபிவிருத்திக் கணக்கு காணப்படுவதுடன், நிறுவனத்தின் முகாமைத்துவச் சபையின் அனுமதியின் கீழ் பதவியணியின் உறுப்பினர்களது மருத்துவ நன்மைகளைச் செலுத்துவதற்கு நிறுவனத்தின் உழைக்கும் நிதியத்தினை பதவியணிக்கான மருத்துவக் கணக்குக் கொண்டுள்ளது. | உரிய அனுமதியின் மீது நிதியங்களை நடாத்திச் செல்லல் வேண்டும். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொறியியல் மற்றும் பராமரிப்பு அளகின் வேலைகள் பொறியியல் பதவிக்கான வெற்றிடத்திற்கு தகைமை வாய்ந்த அலுவலர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்யாது முகாமைத்துவச் சபையின் அனுமதியின் மீது வேலை வழங்குதல் அடிப்படையின் கீழ் முன்னாள் பிரதி பதிவாளர் ஒருவரின் சேவையினைப் பெற்று 2019 ஆம் ஆண்டிலே மாத்திரம் ரூ.1,200,000 பெறுமதியான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன. | 2018 மற்றும் 2019 ஆண்டு காலப் பகுதிகளில் அமுல்படுத்திய கருத்திட்டங்கள் என்பவற்றினை வெற்றிகரமான முறையில் முடிப்பதற்காக நிறுவனத்தினுள் வேலை பொறியியலாளர் ஒருவர் இன்மையால் மூலதனப் பணிகளை மேற்கொள்ளல் தொடர்பான நிருவாக அனுபவமிக்க ஓய்வுபெற்ற பிரதி பதிவாளர் முகாமைத்துவ சபையின் அனுமதியுடன் வேலை பொறியியலாளர் பதவி வெற்றிடத்திற்காக பொருத்தமான ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் வரையில் அப்பதவிக்குரிய நிருவாக வேலைப் பகுதியினை மேற்கொள்வதற்காக வேலை வழங்குதல் அடிப்படையின் கீழ அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். | அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்கு துரிதமாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுதல் வேண்டும். |